**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.1709/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மாரியம்மாள் | Prosecution | LW-2as PW2 |
| Father Name | க/பெ. தேவேந்திரன் | Defence | |
| Village | திருவாலி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 40/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **13.10.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து விவசாய வேலை செய்துவருகிறேன். கடந்த 25.09.2023 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது 1 வது எதிரி என்னை குச்சிக்காரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டே வந்தார். நான் 1 வது எதிரியை பார்த்து ஏன் மாமா இப்படி குடித்துவிட்டு வந்து பேசுகிறீர்கள் எதுவாக இருந்தாலும் காலை யில் பேசிக்கொள்ளாலாம் என்று கூறினேன். பேசிக்கொண்டே இருக்கும் போதே 1 வது எதிரி ஓங்கி கண்ணத்தில் அறைந்தார். அந்த சமயம் எனது குழந்தை இரத்த வாந்தி எடுத்தால் பதட்டத்தில் என்ன செய்வது என்று எனக்கு புரியாமல் போனது. அருகில் இருந்த மக்கள் சண்டையை விலக்கி விடவே நாங்கள் அங்கிருந்து காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். 1வது எதிரியின் அண்ணனும், அண்ணனின் மனைவியும் சண்டையை விலக்கிவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு இடுகாட்டிலும், இறப்புக்கு பின் என்ன செலவு நடந்தது என்பது நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் கணவர் சொல்லி எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். என்னன்ன செலவு ஆனது என்ற விபரத்தினை என் கணவர் என்னிடம் கூறினாறா என்றால் இல்லை. எனது கணவர் இது சம்பந்தமாக எதுவும் கூறவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு என்னை 1வது எதிரி திட்டியது பற்றி போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். என் கணவர் 1வது எதிரி இளவரசனை திருடன் என்று கூறிய வி பரம் எனக்குதெரியாது

என்றால் சரிதான். அதுபோல 1 வது எதிரி இளவரசன் என் வீட்டிற்கு வந்து என்னை தான் அறைந்தார் என்று போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். என்னை அறைந்தது தொடர்பாக வெளிக்காயம் ஏதும் இல்லை என்றாலும் அதற்காக மருத்துவமனை எதுவும் சொல்லவில்லை என்றாலும் சரிதான்.

1வது எதிரியின் அண்ணனும் அண்ணியும் வந்து சம்பவத்தை விலக்கிவிட்டார்கள் என்ற விபர த்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி சம்பவம் எதிரி 1 ன் அண்ணன் அண்ணிக்கு தெரியும் என்றால் சரிதான். அவர்கள் எதிரி 1 இளவரசனை கண்டித்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு ஊர்காரர்கள் சம்பவ இடத்திற்கு வந்து விபரம் தெரியும் என்றாலும் சரிதான். பிறகு 10.00 மணியளவில் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். என்னை எதிரிகள் அடிக்கவில்லை என்றாலும் எனக்கு எந்த காயமும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் அண்ணண் அண்ணி 1 வது எதிரியை கண்டித்து கூறினார்கள் என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றாலும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல.

இறப்பு செலவிற்காக 5000/– ரூபாய் கொடுக்கப்பட்ட பணத்தில் 4500/– செலவு போக மீதம் 500/– ரூ இருந்த பணத்தை என் கணவர் கணக்கினை முடித்து கொடுக்கவில்லை என்றாலும் அதனால் ஊர்தலைவர் என்ற முறையில் இளவரசன் மீது எனது கணவர் விரோதம் கொண்டு உண்மையை மறைப்பதற்காக வேண்டி பொய்யான புகாரினை கொடுத்து அதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் மகளிர் என்பற்காக தன்னை தாக்கியதாக வழக்கிற்கு கூடுதல் வலுசேர்க்க வேண்டி என்னை திட்டி தாக்கியதாக எனது கணவர் கொடுத்த புகாருக்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லவது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.1709/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தேவந்திரன் | Prosecution | LW-1 as PW1 |
| Father Name | முனுசாமி | Defence | |
| Village | திருவாலி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 48/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **13.10.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரில் வசித்து கூலி வேலை செய்துவருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 25.09.2023 ம் தேதி அன்று எங்கள் ஊரை சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவர் இறந்து விட்டார். நான் அந்த சமயத்தில் எங்கள் ஊரின் கணக்குப்பிள்ளையாக வேலை செய்து வந்தேன். அப்போது 1 வது எதிரி கிராம தலைவராக செயல்பட்டு வந்தார். அன்றைய தினம் இறந்து போன ராஜமாணிக்கத்தின் உடலை தகனம் செய்வதற்கான மயான செலவு கணக்கு வழக்கை நான் பார்த்து வந்தேன். பணத்தின் பாக்கித்தொகைகள் 1 வது எதிரியின் வசம் இருந்து வந்தது. அதில் மொத்தம் 4500/- ரூபாக்கான கணக்கு என்னிடம் இருந்தது. மீதம் ரூ.500/- 1வது எதிரி வசம் இருந்தது.

நான் இந்த விபரத்தை ஆனந்தபாபு என்பவரிடம் கூறியிருந்தேன். அந்த சமயத்தில் 3வது எதிரி ராஜேந்திரன் அருகில் இருந்தார். அவர் நான் 1வது எதிரி பணத்தை திருடிவிட்டதாக ஆனந்த பாபுவிடம் கூறியதாக 1 வது எதிரி யிடம் தெரிவித்துள்ளார். அதனை தொடர்ந்து 1 வது எதிரி தவறாக எண்ணி இரவு 8.00 மணியளவில் நானும் எனது மனைவியும் குழந்தையுடன் தனியாக வீட்டில் இருந்த போது என்னை குச்சிக்காரி மகனே, தேவுடியா மகனே என்று தகாத வார்த்தைகளால் திட்டி என்னை எப்படி நீ இவ்வாறு சொல்லலாம் என்று கேட்டு என்னை தாக்க வந்தார். அப்போது தடுக்க வந்த எனது மனைவி மீது அடி விழுந்தது. அதன் பிறகு எதிர் வீட்டில் வசித்துவரும் 1 வது எதிரியின் அண்ணன் இளங்கோவன் என்பவர் சண்டையை விலக்கிவிட்டார். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும்., **அந்த புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த

புகார் மனுவை கடந்த 25.09.2023 ம் தேதி இரவு 10.30 மணியளவில் காவல் நிலையம் சென்றுகொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் யார் யாருக்கு தெரியும் என்று எனது போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எதிரியின் அண்ணனுக்கும் அண்ணிக்கும் சம்பவம் தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர்களை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். இறப்பு சடங்கு தொடர்பான செலவு கணக்கினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. இறப்பு சடங்கிற்காக கொடுக்கபட்ட 5000/- ரூபாய் பணத்தில் 4500/- ரூ. செலவு போக மீதம் ரூ.500/- யை கணக்கு வழக்கு பார்த்து நான் சரிவர கொடுக்காத காரணத்தினால் அதனை கேட்ட ஊர் தலைவர் எதிரி 1 இளவரசன் மீதும் மற்ற எதிரிகள் மீதும் விரோதம் கொண்டு அவர்கள் மீது பொய் புகார் அளித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி மகளிர் என்பதற்காக வழக்கில் கூடுதல் வலு சேர்க்க வேண்டி என் மனைவியை தாக்கியதாக பொய்யாக புகார் அளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் ஏதும் நடைபெற வில்லை என்றாலும் நான் கொடுத்த புகார் பொய் என்றாலும் சரியல்ல. 1 வது எதிரியின் அண்ணன் இளங்கோவன் என்பவர் சண்டையை விலக்கிவிட்டார் என்று போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புகாரை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் போலிசாரிடம் புகார் ஏதும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் போது இரவு 10.30 மணி என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் பொய்யாக புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**